## சகிப்புத்தன்மையும் பொறுமையும்

ஹஜ்ரத் துஃபைல் பின் அம்ரு அத்தவ்சி (ர) அவர்கள் ஈமான் கொண்ட போது இறைத்தூதர் ﷺ அவர்களிடம் தன்னுடைய வம்சத்தினரிடம் சென்று அவர்களை இஸ்லாத்தின்பால் அழைப்பதற்கு அனுமதி கேட்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்களும் அவர்களுக்கு அனுமதியளித்துவிட்டார்கள். அவர் அங்கு சென்று எடுத்துக்கூறியும் யாரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் நம்பிக்கையிழந்தவராக மீண்டும் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் திரும்பிவந்து நடந்ததைப்பற்றிய அனைத்து விஷயங்களையும் எடுத்துக்கூறி கோபத்தின் காரணமாக அம்மக்களைச் சபிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் துஆ செய்வதற்காகக் கைகளை உயர்த்தினார்கள். அங்கிருந்தவர்கள் நினைத்தார்கள் தவ்ஸ் மக்கள் அழிந்துவிடுவார்கள், ஏனெனில் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய துஆவை அல்லாஹ் தஆலா நிராகரிப்பதில்லை. ஆனால், அகிலங்களுக்கும் கருணை வடிவான இறைத்தூதர் ﷺ அவர்கள் இந்த துஆவைக் கேட்டார்கள்: அல்லாஹ்வே தவ்ஸ் வம்சத்தினருக்கு நேர்வழியைக் காட்டு அவர்களை இஸ்லாத்தில் இணைத்துவிடு **(متفق عليه)**. ஹஜ்ரத் துஃபைல் பின் அம்ரு அத்தவ்சி (ர) அவர்கள் தம்முடைய வம்சத்தினரிடம் சென்று இஸ்லாத்தின்பால் அழைப்புக் கொடுத்தார்கள், அனைவருமே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் நிகரற்ற சகிப்பும் எதையும் தாங்கிக்கொள்ளும் தன்மையும் பொறுமையுமுடையவராக இருந்தார்கள், மக்களுக்காக அல்லாஹ்விடம் துஆ கேட்பவராகவும் இருந்தார்கள், ஒருபோதும் அவர்களை சபித்ததில்லை.

ஒரு இரவில் ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜ்ஸீஸ் (ரஹ்) அவர்கள் தம்முடைய ஒரு சிப்பாயுடன் ரோந்து சென்றுகொண்டிருந்தார்கள். இருவரும் ஒரு பள்ளிவாசலில் நுழைந்தார்கள், எல்லாப்புறங்களிலும் இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. அங்கு தூங்கிக்கொண்டிருந்த ஒருவரை அவருடைய கால் தட்டியது. அந்த மனிதர் தூக்கம் கலைந்ததால் கோபமடைந்து பைத்தியமா என்று சீறினார். ஹஜ்ரத் உமர் (ரஹ்) அவர்கள் நிதானமாகவே கூறினார்கள், இல்லை, நான் பைத்தியம் இல்லை. அந்த சிப்பாய் இவ்வாறு நடந்துகொண்டதற்கு அந்த மனிதரைத் தண்டிக்க முற்பட்டபோது க்ஹலீஃபா அவர்கள் அவரைத்தடுத்துவிட்டுக் கூறினார்கள், அவன் உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்று கேட்டான், நானும் அதற்கான பதிலை நான் பைத்தியம் இல்லை என்று கொடுத்தும் விட்டேன், அதாவது, பேச்சு இத்துடன் முடிந்துவிட்டது. சகிப்புத்தன்மையும் பொறுமையும் உள்ள ஒரு மனிதர் மட்டுமே இவ்வாறு செய்ய முடியும். ஹஜ்ரத் அஹ்னஃப் பின் ஃகைஸ் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய பிரபலமான

www.uzairfalahi.com

நபித்தோழர்களில் ஒருவர். அவர்களுடைய சகிப்புத்தன்மை நிகரற்றது. அவர் எதையும் தாங்கிக்கொள்ளும் ஆற்றலும் பொறுமையும் உடையவராக இருந்தார். மக்கள் அவருடைய பொறுமையை உதாரணமாகக் கூறுவது வழக்கம். ஒருவர் அவரை ஏசி இகழ்ச்சியாகப்பேசினார், ஆனால், அவர்கள் அந்த மனிதருக்கு எதிராக ஒன்றுமேகூறவில்லை, ஒதுங்கிச் சென்றுவிட்டார்கள். அந்த மனிதரும் வினோதமானவராக இருந்தார், அவரைப் பின் தொடர்ந்து சென்று அவரை ஏசி இழிவாகப் பேசிக்கொண்டிருந்தார். ஹஜ்ரத் அஹ்னஃப் பின் ஃகைஸ் (ர) அவர்கள் தன்னுடைய குடியிருப்புக்கு அருகாமையில் சென்றடைந்தபோது அவனை நோக்கிக்கூறினார்கள், சகோதரரே, இன்னமும் ஏதும் உம்முடைய மனதில் மீதம் இருந்தால் அதனையும் இங்கேயே கூறிவிடுங்கள், இந்தக் குடியிருப்பிலுள்ள மக்கள் உம்முடைய பேச்சைக்கேட்டு உம்மைக் கஷ்டத்திற்குள்ளாக்கிவிடவேண்டும் என்று நான் விரும்பவில்லை. அவர்களைப்பற்றிய மற்றொரு சம்பவமும் உண்டு. சிலர் அவருக்குத் தொல்லை கொடுக்கும் எண்ணத்துடன் ஒரு மனிதரைத் தயாரித்து அவரிடம் அனுப்பினார்கள். அவன் அவர்களைத் திட்டியும் அவதூறு கூறிக்கொண்டும் இருந்தான். அவர்களோ மிகவும் பொறுமையுடன் அவன் கூறுவதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள், அதற்குப் பதிலாக ஒன்றுமே கூறவில்லை. இந்நிலையில், சாப்பிடும் நேரம் வந்துவிட்டது. ஹஜ்ரத் அஹ்னஃப் பின் ஃகைஸ் (ர) அவர்கள் கூறினார்கள், சகோதரரே, சாப்பாட்டு நேரம் ஆகிவிட்டது, உணவும் வந்துவிட்டது, வாரும், என்னுடன் உட்கார்ந்து முதலில் சாப்பாடு சாப்பிடுங்கள். இறுதியில், அவனும் ஒரு மனிதன் என்ற வகையில் அவனுக்கே வெட்கம் வந்துவிட்டது அவன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

www.uzaifahi.com

### சகிப்புத்தன்மையின் விளக்கம்

சகிப்புத்தன்மை (ஹில்மு) என்பது ஒருவர் தன்னுடைய உணர்வுகளைக் கட்டுக்குள் வைப்பது, கோபத்தைக் கட்டுப்படுத்துவது, பிடிக்காத விஷயங்களையும் சகித்துக்கொள்வது, தீங்கிழைக்கப்பட்டாலும் அதனை நல்ல முறையில் எதிர்கொள்வதுமாகும். கோழைத்தனத்தையும் இழிவை சகித்துக் கொள்வதையும் சகிப்புத்தன்மை என்று கூறுவதில்லை, மாறாக, இது ஒரு மனிதனுடைய பண்புகளில் உச்சக்கட்டமான உயர்வான நிலையாகும், மக்களின் அவதூறுகளுக்குப் பதிலாக தாமும் அவதூறாகவும் இழிவாகவும் பேசாமலிருப்பதும் மக்கள் தவறாக நடந்துகொள்வதையும் தீங்கிழைப்பதையும் பொருட்படுத்தாமலிருப்பதுமாகும்.

### அல்லாஹ்வின் சகிப்புத்தன்மை

சகிப்புத்தன்மையும் தாங்கிக்கொள்வதும் அல்லாஹ் தஆலாவின் பண்புகளாகும். அவனுடைய படைப்புகளான மனிதர்கள் அவனுக்குக்கீழ்ப்படிய மறுக்

கின்றனர், அவனுடைய கட்டளைகளுக்கு மாறு செய்கின்றனர், அவனையே நிராகரிக்கின்றனர், அதற்கும் மேலாக மற்ற மக்களையும் இறைமறுப்புக்குத் தூண்டுகின்றனர். இருப்பினும், அல்லாஹ் தஆலா தன்னடியார்களுக்கு அவகாசமளித்துக் கயிற்றைத் தளர்த்திவிடுகிறான், அவர்களை வாழவிடுகிறான் அவர்களை உடனுக்குடன் பழிவாங்குவதில்லை. இதுவே அவனுடைய சகிப்புத்தன்மையும் தாங்கிக்கொள்ளும் பண்பின் அடையாளமுமாகும்.

அல்லாஹ் தஆலா கூறுகிறான்: **(البقرة: 235)** وَٱعۡلَمُوٓاْ أَنَّ ٱللَّهَ غَفُورٌ حَلِيمٞ பொருள்: மேலும், *அல்லாஹ் மன்னிப்பவனும் சகிப்புத்தன்மையும் உடையவனாக இருக்கின்றான் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்*(அல்பஃகறஹ்235)

அல்லாஹ் தஆலா தன்னுடைய நபிமார்களையும் சகிப்புத்தன்மையுடையவர்களாக ஆக்கினான். ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்களைப்பற்றிக் கூறுகிறான்: **(التوبة: 114)** إِنَّ إِبۡرَٰهِيمَ لَأَوَّٰهٌ حَلِيمٞ ﴿١١٤﴾ பொருள்: *திண்ணமாக, இப்ராஹீம் (அ) அவர்கள் மிக இளகிய மனமும் இறையச்சம், சகிப்புத்தன்மையும் உடையவராய் இருந்தார்.(அத் தவ்பஹ் 114).*

மேலும், **(الصّٰفّٰت: 101)** فَبَشَّرۡنَٰهُ بِغُلَٰمٍ حَلِيمٖ ﴿١٠١﴾ பொருள்: *சாந்த குணம் கொண்ட ஒரு மகனைப்பற்றிய ஒரு நற்செய்தியை நாம் அவருக்கு அறிவித்தோம் (அஸ் ஸாஃப்ஃபாத் 101).* இறைத்தூதர் ﷺ அவர்கள் எல்லோரையும்விட சகிப்புத்தன்மையுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் ﷺ மக்களுடைய தவறுகளைக் காண்பார்கள், இருப்பினும் பொருட்படுத்தமாட்டார்கள். (மக்காஹ்விலிருந்த) மக்கள் அவர்களை என்னவெல்லாம் செய்யவில்லை? இருப்பினும் தனக்காக எவரையும் பழிவாங்கவில்லை. எப்போதுமே கட்டுப்பாடுடன் இருந்ததோடு கோபத்தையும் தணித்துக்கொள்வார்கள், சொல்லப்போனால், கோபமே கொண்டதில்லை, அவர்களைச் சபிக்காமல் அவர்கள் நேர்வழிபெறவேண்டும் என்று துஆ கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

## சகிப்புத்தன்மையின் சிறப்பு

**சகிப்புத்தன்மையான பண்பு அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானது** இறைத்தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய ஒரு தோழரிடம் (ர) கூறினார்கள்: உம்மிடத்தில் இரு நற்பண்புகள் உள்ளன, அவற்றை அல்லாஹ் மிகவும் விரும்புகிறான், ஒன்று சகிப்புத்தன்மை மற்றொன்று மென்மையான சுபாவம் (முஸ்லிம்).

**சகிப்புத்தன்மையின் மூலம் அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் அவனுடைய சுவர்க்கமும் கிடைக்கின்றது** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

www.uzairfalahi.com

**مَنْ كَظَمَ غَيْظًا وَهُوَ قَادِرٌ عَلَى أَنْ يُنْفِذَهُ، دَعَاهُ اللَّهُ عَزَّ وَجَلَّ عَلَى رُءُوسِ الْخَلَائِقِ يَوْمَ الْقِيَامَةِ حَتَّى يُخَيِّرَهُ اللَّهُ مِنَ الْحُورِ الْعِينِ مَا شَاءَ**

பொருள்: *எவர் தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றும் அதனைத் தணித்துக்கொள்கிறார்களோ, அவரை அல்லாஹ் தஆலா முக்கியத்துவத்துவம் அளித்து அழைப்பான் மற்றும் உனக்குப் பிரியமான எந்த ஹூரீன்களையும் தேர்ந்தெடுத்துக்கொள் என்று முழு உரிமையளிப்பான் (அபூ தாவூத், திர்மிதி).*

**சகிப்புத்தன்மை ஒரு மனிதனின் மன உறுதியின் பிரதிபலிப்பாகும்** அவனுடைய உணர்வுகளின்மீதுள்ள கட்டுப்பாட்டின் ஆதாரமாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: **لَيْسَ الشَّدِيدُ بِالصُّرَعَةِ إِنَّمَا الشَّدِيدُ الَّذِي يَمْلِكُ نَفْسَهُ عِنْدَ الْغَضَبِ**

பொருள்: *மக்களை வென்று வீழ்த்துபவர்கள் மட்டுமே பலவான்களல்ல, மாறாக பலவான்கள் யாரெனில் கோபத்தின் சீற்றம் ஏற்படும்போது ஆற்றல் பெற்றிருந்தும் தன்னையே கட்டுப்படுத்திக்கொள்பவன்தான் பலசாலியாவான் (முஸ்லிம்).*

**சகிப்புத்தன்மை** என்பது எத்தகைய பண்பு என்றால் அதன் மூலம் விவகாரங்கள் தீர்க்கப்படுவது மட்டுமல்லாமல் அவற்றிற்குக் காரணமானவர்களின் நட்பையும் எதிரிகளின் மனதையும் கவரமுடியும்.

அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

**ٱدۡفَعۡ بِٱلَّتِي هِيَ أَحۡسَنُ فَإِذَا ٱلَّذِي بَيۡنَكَ وَبَيۡنَهُۥ عَدَٰوَةٞ كَأَنَّهُۥ وَلِيٌّ حَمِيمٞ ﴿٣٤﴾ (فصلت: 141)**

பொருள்: *மிகச் சிறந்த நன்மையைக்கொண்டு நீர் தீமையைத் தடுப்பீராக, அப்போது உம்முடன் கடும் பகைமைகொண்டிருந்தவர்கூட உற்ற நண்பராய் அகிவிடுவதைக் காண்பீர்(ஃபுஸ்ஸிலத் 34).* ஒரு பண்பற்ற மனிதனுடைய முறையற்ற செயல்களுக்கான பதில் பேசாமல் அமைதியாக இருப்பதைவிட வேறு ஒன்றும் இருக்கமுடியாது. அவன் உங்களை உணர்ச்சிவசப்படுத்தி சண்டைக்கு இழுக்க முயன்றாலும் அவனை ஏதோ ஒரு வகையில் தவிர்த்துவிடுவதைவிட அவனுக்கான தண்டனை எதுவுமில்லை. அவனுடைய பண்பற்ற நிலைக்கு நாம் இறங்கி அவனை எதிர்கொள்வது அவனுடைய வெற்றியாக ஆகிவிடுகிறது. ஆனால், அவனுடைய விருப்பத்திற்கு மாறாக அவனுக்கு முக்கியத்துவம் தராமல் தவிர்த்துவிடுவது அவனுடைய தோல்வியாகும்.

**சகிப்புத்தன்மை** அதனைக் கடைபிடிப்பவர்களைத் தவறிழைப்பதிலிருந்தும் ஷைத்தானின் பிடியில் சிக்கிவிடுவதிலிருந்தும் விலக்கிக்கொள்கிறது.

www.uzairfalahi.com

**கோபம்** கோபம் என்பது ஒரு தனி மனிதனுடைய குறைபாடாகும் அதனை எவரும் விரும்புவதில்லை. இது எந்நிலையிலும் விரும்பத்தக்கவிஷயமல்ல. ஒருவர் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து கூறினார், இறைத்தூதரே ﷺ எனக்கு ஏதும் அறிவுரை கூறுங்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், ஒருபோதும் கோபம் கொள்ளாதீர்கள் (புக்ஹாரி). கோபம் என்பது உண்மையில் ஒருவித பலவீனமாகும், இதிலிருந்து ஒரு மனிதர் தன்னுடைய உணர்வுகளின்மீது எந்த அளவிற்கு கட்டுப்பாடு வைத்துள்ளார் என்பது தெரியவருகிறது. யார் தன்மீது கட்டுப்பாடு வைப்பதில்லையோ அவர்தான் கோபமடைவார். கோபமடைந்துவிடும் நிலையில் ஒரு மனிதன் தன்னுடைய இயல்பான நிலைமையில் இருப்பதில்லை, இந்த உணர்வுகளை இழந்துவிடும் நிலையில்தான் அவன் எதையும் செய்துவிடுகிறான், பின்பு அதற்காக வருத்தமும் அடைகிறான். ஆகவே, கோபத்தின் விளைவு வருத்தமும் கைசேதமுமின்றி வேறொன்றுமில்லை. வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில், நேரம் கடந்துவிட்டபின் விவகாரம் முற்றிலும் சீரழிந்துவிடுகிறது. ஒருவர் ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்களைத் தரக்குறைவாகப்பேசிவிட்டார், அங்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களும் இருந்தார்கள். ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் அதற்கு முக்கியத்துவமளிக்கவில்லை. அவன் மீண்டும் இரண்டாவது முறையாக அவ்வாறே இழிவாகப்பேசினான், அப்போதும் அவர்கள் ஒன்றும் கூறவில்லை. இருப்பினும் அவன் மூன்றாவது முறையாக அவதூராகப் போசியபோது அவர்கள் அதற்குப்பதில் கூறினார்கள். உடனே இறைத்தூதர் ﷺ அவர்கள் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார்கள். ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் இதனை விரும்பவில்லை என்பதை உணர்ந்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்று கேட்டார்கள், இறைத்தூதரே ﷺ என்மீது கோபமடைந்துவிட்டீர்களா? இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நீங்கள் அவனுடைய பேச்சைக் கேட்டு அமைதியாகப்பேசாமலிருந்தபோது வானத்திலிருந்து ஒரு வானவர் அவனுக்கு பதில் கொடுத்து உங்களுக்காக வாதாடிக்கொண்டிருந்த நிலையில் நீங்கள் அவனுக்குப் பதில் கூறியவுடனே அந்த வானவர் சென்றுவிட்டார், அங்கே ஷைத்தான் நுழைந்துவிட்டான். நான் ஷைத்தான் இருக்கும் அவ்விடத்தில் எவ்வாறு அமர்ந்திருக்கமுடியும்?

**கோபத்திற்கான மருந்து** இறைத்தூதர் ﷺ அவர்கள் கோபத்திற்கான நிவாரணத்தைப்பற்றிக் கூறியுள்ளார்கள்:

**அமைதியாய் பேசாமலிருத்தல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

وَإِذَا غَضِبَ أَحَدُكُمْ فَلْيَسْكُتْ பொருள்: *உங்களில் எவருக்கும் கோபம் வருமாயின் அவர்கள் அமைதியைக் கடைபிடிக்கவேண்டும். (அஹ்மத்)*

www.uzairiahi.com

**தரைமீது உட்காருதல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

أَلَا وَإِنَّ الغَضَبَ جَمْرَةٌ فِي قَلْبِ ابْنِ آدَمَ، أَمَا رَأَيْتُمْ إِلَى حُمْرَةِ عَيْنَيْهِ وَانْتِفَاخِ أَوْدَاجِهِ، فَمَنْ أَحَسَّ بِشَيْءٍ مِنْ ذَلِكَ فَلْيَلْصَقْ بِالأَرْضِ

பொருள்: *மக்களே, கேளுங்கள், கோபம் என்பது ஆதமுடைய மக்களின் மனதில் நெருப்பைப்போன்றதாகும், நீங்கள் கோபத்திற்கு ஆட்பட்ட ஒரு மனிதருடைய கண்கள் சிவந்து நரம்புகள் வீக்கமடைவதைப் பார்த்ததில்லையா? ஆகவே, இவ்வாறு நீங்கள் உணர்ந்தால் உடனே தரைமீது உட்கார்ந்துகொள்ளுங்கள்.* (திர்மிதி, அஹ்மத்)

**இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:**

إِذَا غَضِبَ أَحَدُكُمْ وَهُوَ قَائِمٌ فَلْيَجْلِسْ، فَإِنْ ذَهَبَ عَنْهُ الْغَضَبُ وَإِلَّا فَلْيَضْطَجِعْ

பொருள்: *உங்களுக்குக் கோபம் வரும்போது நீங்கள் நின்றுகொண்டிருந்தால் உட்கார்ந்துகொள்ளுங்கள், அதற்குப்பின்பும் கோபம் தணியாதிருப்பின் படுத்துக்கொள்ளுங்கள்* (அபூ தாவூத், அஹ்மத்) .

**உதூ செய்துகொள்ளுங்கள் அல்லது குளியுங்கள்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ الْغَضَبَ مِنَ الشَّيْطَانِ،وَإِنَّ الشَّيْطَانَ خُلِقَ مِنَ النَّارِ،وَإِنَّمَا تُطْفَأُ النَّارُ بِالْمَاءِ،فَإِذَا غَضِبَ أَحَدُكُمْ فَلْيَتَوَضَّأْ

பொருள்: *கோபம் ஷைத்தானிடமிருந்து வருகின்றது மற்றும் ஷைதத்தான் நெருப்பினால் படைக்கப்பட்டுள்ளான், நெருப்பைத் தண்ணீர் மட்டுமே அணைக்கின்றது, ஆகவே, கோபம் வருமானால் உதூ செய்துகொள்ளுங்கள் (அபூ தாவூத்).*

**நஃப்ஸை** *(ஒருவருடைய மனநிலை,இச்சைகளை) சிறிது சிறிதாகவே சகித்துக்கொள்ளும் பண்புக்குப் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

خُذِ ٱلْعَفْوَ وَأْمُرْ بِٱلْعُرْفِ وَأَعْرِضْ عَنِ ٱلْجَٰهِلِينَ ﴿١٩٩﴾ (الأعراف: 199)

பொருள்: *நபியே, மன்னித்து மறக்கும் நடத்தையை மேற்கொள்வீராக, மேலும், நன்மை செய்யுமாறு ஏவுவீராக. இன்னும் அறிவீர்களைவிட்டு விலகி இருப்பீராக.(அல் ஆஃராஃப் 199). அல்லாஹ் தஆலா இதனைத் தனக்குப் பிரியமான அடியார்களின் பண்பாக விவரிக்கிறான்.*

وَإِذَا خَاطَبَهُمُ ٱلْجَٰهِلُونَ قَالُوا۟ سَلَٰمًا ﴿٦٣﴾ (الفرقان: 63)

www.uzairfalahi.com

பொருள்: *அறிவீனர்கள் அவர்களுடன் முறைகேடாக உரையாடினால் உங்களுக்கு சலாம் (சாந்தி உண்டாகட்டும்) என்றுகூறி விலகிவிடுவார்கள் (அல் ஃபுர்ஃகான் 63).* மற்றொரு இடத்தில் கூறுகிறான்:

وَإِذَا مَا غَضِبُوا۟ هُمْ يَغْفِرُونَ ﴿٣٧﴾ (الشورى: 37)

பொருள்: *அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டால் பொறுத்துக்கொள்கிறார்கள் (அஷ் ஷூரா 37).*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கோபம் கொள்ளாதீர்கள் என்று கூறுவது (புக்ஹாரி, திர்மிதி), மற்றும் இந்த அனைத்து வழிகாட்டுதல்களும் நாம் நமக்குள் சகிப்புத்தன்மை, பொறுமை, தாங்கிக் கொள்ளும் ஆற்றல் ஆகிய பண்புகளை எல்லா நேரங்களிலும் கடைபிடித்து அவற்றை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே கூறுப்பட்டுள்ளன.

* * *

www.uzairfalahi.com